குழாய் அறுக்கும் பணி (Line Cutting)

எப்போது முடிக்க வேண்டும் - எந்தவொரு குழாய் அறுக்கும் பணி தொடங்குவதற்கு முன்

வேலையைத் தொடங்குவதற்கு முன் கீழே உள்ள ஒவ்வொரு கட்டுப்பாடு / பாதுகாப்பையும் உறுதிப்படுத்தவும்	ஒவ்வொரு கட்டுப்பாடு / பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவதற்கான வழிகாட்டுதல்	பணியைச் செய்யும் நபர்(கள்)	வேலை தொடக்க சரிபார்ப்பாளர்
நான் உறுதிப்படுத்தியுள்ளேன்:			
1 **குழாய் (Line/Pipe) அறுக்கும் பணிக்காக, ஆற்றல் மூலங்களை தனிமைப்படுத்தல் (Energy Isolation) தேவையா என்பது மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன.** **இந்த குழாய் (Line/Pipe) அறுக்கும் பணிக்கு ஆற்றல் மூலங்களை தனிமைப்படுத்தல் தேவையா?** **□ ஆம் □ இல்லை** **ஆம் என்றால்: ஆற்றல் மூலங்களை தனிமைப்படுத்தல் வேலை தொடக்க சரிபார்ப்பு பூர்த்தி செய்யவும்.** **இல்லை என்றால்: அடுத்த 2 கட்டத்திற்குச் செல்லவும்.**	• அங்கீகரிக்கப்பட்ட தனிமைப்படுத்தல் நடைமுறை (Isolation Procedure) தயாராக உள்ளது மற்றும் தகுதி பெற்ற நபரால் சரிபார்க்கப்பட்டுள்ளது. • அபாயம் ஏற்படுத்தக்கூடிய அனைத்து ஆற்றல் மூலங்களும் கண்டறியப்பட்டு, தனிமைப்படுத்தப்பட்டு, திட்டத்தின்படி பூட்டு (Lock) மற்றும் குறிச்சொல் (Tag) பொருத்தப்பட்டுள்ளன. • சக்தி எதுவும் இல்லாத நிலை (Zero Energy State) உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. • அபாயகரமான பொருட்கள் அல்லது வாயுக்களை அகற்ற, அமைப்பு (System) காலி செய்யப்பட்டு(Drained), சுத்தம் செய்யப்பட்டு (Flushed) அல்லது வாயு நீக்கம் (Purged) செய்யப்பட்டுள்ளன.		
2 **ஆபத்துகள் கண்டறியப்பட்டு, பணிக்குழுவினருக்கு தெரிவிக்கப்பட்டு, தேவையான கட்டுப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.**	• வேலை அனுமதி (Work Authorization) மற்றும் ஆபத்து மதிப்பீடு (Hazard Analysis) முடிக்கப்பட்டு, தொடர்புடைய பொறுப்பாளர்களால் பரிசீலிக்கப்பட்டுள்ளன. • வேலை தொடங்குவதற்கு முன், பணிக்குழுவினருடன் ஆபத்துகள் குறித்து விவாதிக்கப்பட்டுள்ளன. • குழாய் (Line/Pipe) உள்ளே இருக்கும் பொருள் என்ன என்பது அடையாளம் காணப்பட்டுள்ளது. • வேலையை நிறுத்த வேண்டிய சூழ்நிலைகள் (Stop Work Triggers) அடையாளம் காணப்பட்டுள்ளன. • ஒரே நேர பணிகள் (SIMOPS) தொடர்பான ஆபத்துகள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன. • முதல் குழாய் அறுக்கும் இடத்தில் (First Line Cut Location), தகுதி பெற்ற நபர் கண்காணிப்பிற்காக நியமிக்கப்பட்டுள்ளார்.		
3 **குழாய் அறுக்கும் இடம், Tape அல்லது அங்கீகரிக்கப்பட்ட அடையாளம் மூலம் தெளிவாக குறிக்கப்பட்டுள்ளது.**	• குழாய் அறுக்கும் இடம் (Line Cut Location) குழாயில் தெளிவாக குறிக்கப்பட்டுள்ளது. • தேர்வு செய்யப்பட்ட கருவிகள், இந்த பணிக்கு ஏற்றதா என்பதை மதிப்பீடு செய்து உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. • வேலை நடைபெறும் இடத்தில் உள்ள மூடுபொருள் (Covering), காப்பு அடுக்கு (Insulation) மற்றும் வெப்பமூட்டும் அமைப்பு (Heat Tracing) அகற்றப்பட்டுள்ளன.		
4 **தடுப்பு பகுதிகள் (Restricted Zones) மற்றும் தேவையான பாதுகாப்பு தடுப்புகள் (Barriers) அமைக்கப்பட்டுள்ளன.**	• தடுப்பு பகுதிகளுக்கான நுழைவு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது (எ.கா., கண்காணிப்பாளர் (Attendant) அல்லது உடல் தடுப்புகள் (Physical Barriers) மூலம்). • அவசர நேரத்தில் வெளியேறும் வழிகள் (Escape Routes) எந்த தடையும் இல்லாமல் உள்ளன மற்றும் அவை பணிக்குழுவினருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளன.		

வேலை தொடங்கும் முன் சரிபார்ப்பு - SWC

5	**குழாயின் (Pipe) உள்ளே வாயு பரிசோதனை (Gas Test) செய்யப்பட்டுள்ளது.**	• குழாய் அறுக்கும் இடத்தில் (Cut Location) வாயு பரிசோதனை முடிவு பெறப்பட்டுள்ளது. – வாயு பரிசோதனை, திறந்துள்ள மற்றும் உறுதிப்படுத்தப்பட்ட அணுகல் இடம் (Open Location) வழியாக அல்லது – குழாய் அறுக்கும் இடத்தில் ¼ அங்குல (6 மிமீ) துளை செய்து, அங்கீகரிக்கப்பட்ட கருவி மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. • வேலை நடைபெறும் பகுதி மற்றும்/அல்லது உபகரணங்களில் வாயு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.		
6	**அருகில் உள்ள குழாய்கள் (Piping) மற்றும் உபகரணங்கள் (Equipment) சேதமடையாதபடி பாதுகாக்கப்பட்டுள்ளன.**	• அறுக்கும் கருவியால் (Cutting Tool) சேதம் ஏற்படாதபடி, போதுமான பாதுகாப்பு பொருட்கள் (எ.கா., உலோக கவசம் (Metal Shielding), பிளைவுட் (Plywood), அறுக்காத பாதுகாப்பு துணி (Cut-Resistant Material)) பயன்படுத்தப்பட்டுள்ளன. • பயன்படுத்தப்படும் அறுக்கும் கருவி, அருகிலுள்ள உபகரணங்களுக்கு கூடுதல் பாதிப்பு ஏற்படாத வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. • பாதுகாப்பு ஏற்பாடு செய்ய இயலாத குழாய்கள் இருந்தால், தேவையான கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் (Controls) அல்லது நடைமுறை (Procedure) தயாரிக்கப்பட்டுள்ளன.		
7	**உபகரணங்கள் (Equipment) எதிர்பாராத அல்லது பாதுகாப்பற்ற நகர்வு ஏற்படாதபடி உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.**	• குழாய் அறுக்கப்படும் (Line Cut) இடத்தின் இரு பக்கங்களும் பாதுகாப்பாக நிலைநிறுத்தப்பட்டுள்ளனவா என்பதை தகுதி பெற்ற நபர் சரிபார்த்துள்ளார். • Cribbing, Jack Stand, Choker மற்றும் Hoist போன்ற ஆதரவு உபகரணங்கள் பாதுகாப்பாக அமைக்கப்பட்டு, தாங்க வேண்டிய சுமைக்கு (Load) ஏற்றதாக உள்ளன. • நகர்வு ஏற்படும் வாய்ப்பு இருந்தால், பணிப்பகுதி கட்டுப்படுத்தப்பட்டு, அவசியமில்லாத பணியாளர்கள் அந்த பகுதியில் இருந்து விலக்கி வைக்கப்பட்டுள்ளனர்.		

இந்த கட்டுப்பாடுகள் / பாதுகாப்புகள் நடைமுறையில் உள்ளனவா மற்றும் வேலையைத் தொடங்குவதற்கு முன்பு சரிபார்க்கப்பட்டுள்ளன என்பதை உறுதிப்படுத்தவும். ஏதாவது மாற்றம் ஏற்பட்டால் நிறுத்தி உதவியை நாடுங்கள்.

	அச்சிடப்பட்ட பெயர் மற்றும் பொறுப்பு	கையொப்பம்	தேதி
வேலை தொடக்க சரிபார்ப்பாளர்			

